### திருச்சி சையது முர்துசா பள்ளியில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

## மாணவர்களுடன் உணவு அருந்தினார்!

*திருச்சி, ஜூன் 20 -*

திருச்சி பாலக்கரையில் உள்ள சையது முர்துசா பள்ளியில் இளைஞர் நலன் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் இரவு திருச்சி வந்தார்.

இந்நிலையில் அவர் பாலக்கரை அருகே செயல்படும் முதலமைச்சரின் காலை உணவு உணவுத்திட்ட மைய சமையல் கூடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அந்த ஆய்வுக் கூடம் அருகே உள்ள அரசு சையது முத்துசா மேல்நிலைப் பள்ளியில் காலை உணவு அருந்தும் மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். பின்னர் அவர்களுடன் கலந்து உரையாடிய உதயநிதி ஸ்டாலின் பள்ளி கட்டிடம் கழிப்பறை ஆகியவற்றை சென்று பார்வையிட்டார். தொடர்ந்து பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அதில் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காலை உணவு திட்டம் மாணவர்களுக்கும் முறையாக சென்று சேர்கிறதா என எந்த மாவட்டம் சென்றாலும் அங்கு சென்று ஆய்வு செய்து வருகிறேன். அனைத்து மாணவர்களுக்கும் காலை உணவு திட்டத்தை முறையாக கொண்டு செல்ல அனைத்து நடவடிக்கை களும் எடுக்கப்படுகிறது என கூறினார்.

இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திருச்சி மாநகராட்சி ஆணையர் வைத்திநாதன், மேயர் அன்பழகன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

---

### சுனாமி வேகத்தில் நடந்த அரசுப் பணிகள்

# சாதனை படைத்த கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனை!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூன் 20-

அரசுப் பணிகள் ஆமை வேகத்தில் அல்ல; சுனாமி வேகத்தில் கூட நடைபெறும் என்று தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை நிரூபித்துள்ளது. குறிப்பிட்ட காலத்தில் கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது என்று ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

அரசு பணிகள் நத்தை வேகத்தில்தான் நகரும் என்று பொதுவாக மக்களிடம் ஒரு கருத்து உண்டு. ஆனால், இல்லை.. இல்லை.. அரசு பணிகளை நத்தை வேகத்தில் அல்ல, சுனாமி வேகத்தில் நடத்திக்காட்ட முடியும் என்ற சாதனையை தமிழக அரசின் பொதுப்பணித்துறை நிகழ்த்திக்காட்டியிருக்கிறது.



தலையங்கம்

தினத்தந்தி

19.6.2023 (திங்கட்கிழமை)

சாதனை படைத்த கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனை

10 மாதங்களில் செய்த மகத்தான சாதனை இது! பாராட்டுகள்!!

இந்தியாவில் புகழ்பெற்ற மருத்துவமனை டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனைதான். மத்திய அரசாங்கம், தமிழ்நாடு உள்பட சில மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படும் என்று 2015ம் ஆண்டு அறிவித்தது. தமிழ்நாட்டில் எந்த இடத்தில் எய்ம்ஸ் மருத்துவமனையை தொடங்குவது என்று இடத்தை தேர்வு செய்வதற்கே பெரும் காலதாமதமாகியது. கடைசியாக மதுரை திருப்பரங்குன்றம் தாலுகாவில் உள்ள தோப்பூரில் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டது.

மற்ற மாநிலங்களில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனைகள் மத்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் கட்டப்பட்டதால், பணிகள் வேகமாக நடந்து முடிந்துவிட்டன. தமிழ்நாட்டில் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், அதாவது ஜிக்கா நிறுவ னத்தின் நிதி உதவியுடன் ரூ.2 ஆயிரம் கோடி செலவில் 262 ஏக்கர் நிலத்தில் கட்ட முடிவு செய்யப்பட்டு, 2019ம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி நேரில் வந்து அடிக்கல் நாட்டினார்.

ஆனால், இன்றுவரை சுற்று சுவரை தவிர வேறு எந்த பணிகளும் தொடங்கப்படவில்லை. இப்போதுள்ள நிலையில், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் கட்டுமான பணிகள் தொடங்கி, முதல் நிலை பணிகள் முடிந்து, 2026ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மருத்துவமனையை செயல்பாட்டுக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த பணிகளும் 2033 ம் ஆண்டு முடியும் என ஜிக்கா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு பதவியேற்றவுடன் 2021ம் ஆண்டு ஜூன் மாதம் 3ந்தேதி கலைஞர் கருணாநிதி பிறந்த நாளன்று, தென் சென்னையில் ரூ.250 கோடி செலவில் 500 படுக்கை வசதிகளுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, இந்த மருத்துவமனைக்காக 4.89 ஏக்கர் நிலத்தை கிண்டி கிங் மருத்துவ வளாகத்தில் தேர்வு செய்த முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், 500 படுக்கைகள் என்ற எண்ணிக்கையை ஆயிரம் படுக்கைகள் என்று உயர்த்தி 2022ம் ஆண்டு மார்ச் 21ந்தேதி இந்த மருத்துவமனைக்காக அடிக்கல் நாட்டினார்.

திட்டமிட்டதற்கும் குறைந்த செலவில் கூடுதல் வசதிகளுடன் ரூ.240.54 கோடி செலவில் 6 லட்சம் சதுர அடி பரப்பில், 6 தளங்கள் கொண்ட இந்த உலகத்தர மருத்துவமனை 3 பிரமாண்ட பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் ஒரு ஒப்பந்ததாரரிடம் கொடுக்கப்பட்டு, சுனாமி வேகத்தில் தமிழகஅரசுபொதுப்பணித்துறை மேற்பார்வையில் பணிகள் நடந்தன.

கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை என்று பெயரிடப்பட்ட இந்த மருத்துவமனை, பதினைந்தே மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டு, கடந்த 15 ந்தேதி முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினால் திறக்கப்பட்டுள்ளது. எய்ம்ஸ் மருத்துவமனைக்கு இணையான அனைத்து மருத்துவ வசதிகளையும் கொண்ட இந்த மருத்துவமனையில், மக்கள் உயர் சிகிச்சைகளைப்பெற முடியும். இந்த மருத்துவமனையை மருத்துவ புரட்சி என்றே கூறலாம்.

இந்த சாதனையை நிகழ்த்திய முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம்மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோரை பாராட்டும் தமிழக மக்கள், இதுபோல குறைந்த காலக்கெடுவில் தமிழ்நாட்டில் பரவலாக மேலும் பல உயர் சிறப்பு மருத்துவமனைகளை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறார்கள்.

இவ்வாறு தினத்தந்தி நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

---





பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கணேசபுரம் சுரங்கப்பாதையில் மழைநீர் முழுவதும் வெளியேற்றப்பட்டு போக்குவரத்து சீர்செய்யப்பட்டுள்ளதை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் நேற்று (19.06.2023) பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையாளர் எஸ்.கே.பிரபாகர், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், மண்டல கண்காணிப்பு அலுவலர், துணை ஆணையாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.





தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் நடத்திய மகளிர் சுய உதவிக்குழுவின் உற்பத்தியாளர்கள் மற்றும் சந்தையாளர்கள் இணைய விழாவை திருச்சியில் நேற்று தொடங்கி வைத்த நிகழ்வில், சுய உதவிக்குழுக்களின் பொருட்களுடைய வர்த்தகத்தை மேம்படுத்த 10 உற்பத்தியாளர்கள் 10 சந்தையாளர்கள் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாறிக்கொள்ளப்பட்டது. இதில் தமிழ்நாடு விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகளை சிறந்த தொழில் முனைவோராக்கும் மதி சிறகுகள் One Stop Facility மையத்தின் Logo –வை வெளியிட்டார். இதில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் பலர் கலந்து கொண்டனர். வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் ஊர் போற்ற வாழ்ந்து காட்டிக்கொண்டிருக்கும் மகளிரின் சாதனைகள் அடங்கிய Coffee Table Book ஐயும் வெளியிடப்பட்டது.

---

# திருவாரூர் மண்ணில் திருவருட்செல்வர் ‘கலைஞர் கோட்டம்’ திருவிழா!



எங்கள் அரசியல் ஆசானே! அண்ணாவின் தம்பியே! பெரியாரின் வாரிசே! நீ பல சான்றோர் பெருமக்களுக்கும், ஆன்றோர் அவையினருக்கும் கோட்டங்கள், நினைவு ஆலயங்கள், அருங்காட்சியகங்கள் அமைத்துப் பெருமை பேச வைத்தவன்.

வள்ளுவர் கோட்டம் எழுப்பி வாழ்வியல் வரலாறு பேச வைத்தவன் நீ! கட்டபொம்மன் நினைவுக் கோட்டை உருவாக்கிப் பாஞ்சாலங்குறிச்சியில் விடுதலைப்போரை நினை வுப் படுத்தியவன் நீ! பூம்புகார் கலைக்கூடம் வடித்து கோவலனையும் கண்ணகியையும் நடமாட விட்டவன் நீ! இப்படித் தியாகிகள், சிந்தனையாளர்களுக்குச் சிலை களும் நினைவாலயங்களும் எழுப்பி அவர்களது வரலாற்றைச் செதுக்கி வைத்தவன் நீ! இன்றோ நீ பிறந்த திருவாரூர் மண்ணில் உன் புகழ் பேசப்படக் கலைஞர் கோட்டம் அமைக்கப்பட்டு இன்று திறக்கப்படுகிறது.

சென்னை கிண்டியில் உன் பெயரால் கலைஞர் நூற்றாண்டு உயர்ச் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்பட்டது. மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் உருவாகி வருகிறது. மெரினா கடற்கரையில் உன் பெயர் உலகளவில் பேசப்படப் பேனா நினைவுச் சின்னம் எழுப்பப்படுகிறது. இப்படி உன் பேரால் நலத்திட்டங்கள் மக்களுக்கான வாழ்வாதாரச் சட்டங்கள் தமிழகத்தில் உருவாக்கி சாதனைகள் எழுப்பி வருகிறார் முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின். இது தந்தைக்கு ஒரு மகன் செய்யும் கடமை மட்டும் அல்ல. ஆனால், ஓய்வறியாது உழைத்த தமிழ்மொழி இனத்தை காத்த ஒரு தலைவனுக்கு ஒரு தொண்டன் செய்யும் மாபெரும் கடமையாகும். இந்தியத் திருநாட்டின் மூத்த அரசியல் தலைவன் நீ! பல இந்தியக் குடியரசுத் தலைவர்கள், பிரதமர்களை உருவாக்கி இமயமாக நிற்பவன் நீ! இந்தியாவில் சனநாயகத்திற்கு அவ்வப்போது ஆபத்து வந்த போதெல்லாம், அபாயச் சங்கொலி எழுப்பி அரணாய் நின்று சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம் போற்றுவதில் அரசியல் அமைப்புச் சட்ட மகுடத்தில் மாணிக்கக் கல்லாக ஒளி வீசுபவன் நீ!

தமிழ்மொழி, இனம், மானம், மரபு, பண்பாடு பாதுகாக்கும் போரில் சேர, சோழ, பாண்டியராய்ப் பிறப்பெடுத்துப் புகழ் பரப்பி வந்தவனே! தமிழகத்தைக் காக்க பல்வேறு நேரங்களில் பல்வேறு சிறைக் கொட்டடிகளில் அடைக்கப்பட்டுத் தியாகத் தழும்புகள் ஏற்றவனே நீ!. ஆளுங்கட்சி வரிசையிலிருந்து அமைச்சர், முதல்வர் என்று பொறுப்புகள் வகித்தவனாய் புகழ்ப் பொன்னேட்டில் மணம் பரப்பி வந்தவன். அதைப் போல, எதிர்க்கட்சி வரிசையிலிருந்து சட்டமன்ற மாண்புகள், மரபுகளைப் பேணிக்காத்து வந்ததில் மற்றவர்க்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த நீ! சட்டமன்ற பிதாமகன். மக்கள் பிரச்சினைக்காகக் காலத்தால் அழியாத அளப்பரிய சாதனைகள் பல நிகழ்த்தியவன் நீ!

முத்தமிழறிஞர், மூதறிஞர், ஐந்தமிழறிஞர் என எண்ணற்ற விருதுகள் பெற்ற ஓர் தியாக சீலர். உழைப்பதில், உணர்ச்சி பூண்டு இயக்கத்தைப் போற்றுவதில் உயரிய சீரிய அறிவாளன் நீ!

நீ தந்தை பெரியாரின் சீடர்! பேரறிஞர் அண்ணாவின் அருமைத் தம்பி! சமூக நீதி காக்கும் திராவிட இயக்கத்தின் திருவிளக்கு! வாழும் வையத்துத் தமிழ்க்குல விளக்கு! இத்தகைய சான்றாண்மை மிக்க தலைவரான நீயோ கண்ட மக்களாட்சித் தேர்தல் களங்கள் பதிமூன்று! நீ நின்ற அத்தனை களங்களிலும் தொடர்ந்து வென்று பெருமிதம் கொண்ட வேங்கை.

இந்தியாவில், ஏன்; உலக மக்கள் பரப்பில் தொடர்ந்து மக்களாட்சி எனும் தேர்தல் களத்தில் நின்று, வென்று சாதனைகள் படைத்து வந்த தலைவர் ஒருவர் உண்டென்றால், அவர் நீ ஒருவனே! என்று வரலாறு சுட்டிக்காட்டும் என்பதில் ஐயமில்லை. காலத்தின் கொடையாய், ஞாலத்தின் அறிவாயுதமாய் இதோ உன் வடிவில் தளபதி காட்சி தருகிறார்! நீ எங்களிடம் ஒப்படைத்த தளபதியோ உதய கிரகணங்கள் போல், நாள்தோறும் மக்கள் பணியில் ராஜ உலா வருகிறார். மக்கள் பிரச்சசினையை தீர்க்க பணியில் தோகை விரிக்கும் மயிலாகி மக்களின் மனம் கவர்கிறார். அவர் பல்லக்கில் பயணம் செய்யவில்லை. பாதசாரியைப்போல் நடந்து நடந்து உழைக்கிறார்.

கோட்டை நாற்காலி கொடுங்கோலால் உருவாக்கப்பட்டதல்ல; அது மக்கள் தந்த செங்கோலால் செதுக்கப்பட்டது என்பதனைச் செகத்திற்கு அறைகூவல் விடுத்து, அடையாளமாய் நின்று நிரூபித்துக் கொண்டிருக்கிறார். அறியணை ஏறிய நாளின் நிமிடம் முதல் மானிட உயிர்களைக் காக்க, தன் உயிரையும், உடலையும் பணயம் வைத்து பயணம் செய்து கொண்டிருக்கிறார்!

### கவிஞர் தமிழ்தாசன்

*தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்*



அவர் கீழ்வானின் சிவப்பாய், கிழக்கின் புன்னகையாய் நாள்தோறும் வேர்வைக் குளியலில் பூப்படைகிறார். அதற்கான ஆதாரம் நீ! அடையாளமும் நீ! அடிக்கல்லும் நீ! ஆம்; சொல்வதைச் செய்பவராய், செய்வதைச் சொல்பவராய்க் கரடு முரடான பாதையில் சஞ்சாரம் செய்கிறார். நீ தந்த பயிற்சியை மூச்சாக்கி மக்களுக்காகப் புனித யாத்திரை செய்து கொண்டிருக்கிறார். அவரின் அரசியல் பணிகளைப் பார்த்து வடக்கின் முகங்களே உற்றுப் பார்த்து வியப்பில் வீழ்ந்து கிடக்கின்றன. நீயே விதை! நீயே வேர்! நீயோ விருட்சம்! நாங்களோ விழுதுகள்! எங்கள் இனிய தலைவனே! எங்களின் இதய ரோஜாவே! தாய்ப்பாலும், தமிழும் தரமுடியாத அழகை, அமைதியை, அறிவை எங்களுக்குத் தந்து கொண்டிருக்கிறாய் நாளும் நீ உழைத்து வேர்வை சிந்தியதால்! உனது எழுதுகோல்தான் எங்கள் மனவேரில் தமிழ் உரமிட்டு வீரிய எழுச்சியை உண்டு பண்ணியது. கால்சட்டைப் பருவத்தைக் களவாடியவனும் நீயே! கைக்குட்டைக் கனவுகளில் தன்மானப் புத்தகங்க ளைச் சுமக்க வைத்தவனும் நீயே! பெரியார் எனும் முத்துத்தேர் ஏறிவந்த முத்துவேலர் பெற்ற முத்தமிழே! எங்கள் முகவரிக்கு மெருகேற்றிய மஞ்சள் நிலாவே!

முடிவுறும் வாழ்க்கைச் சகதியில் உழலும் மானிடர்களுக்கெல்லாம் கை கொடுத்துத் தூக்கிவிட்ட ஞாலச்சக்கரவர்த்தி நீ! எங்கள் ஊமை வாழ்க்கை, உனது அறிவொளியால் தான் மேடை ஏறக் கற்றுக் கொடுத்தது. ஊன விரல்கள் ஞானக்கவிதைகள் வரைய விரிந்தன. சூரிய ஒளிக்கீற்றுவிதைகளால் விழுந்து பூமி தனது உடல் வியர்வைகளை உறிஞ்சித் துவட்டிக் கொள்வது போல உனது தரிசனத்தில் நாங்கள் ஞானம் பெறுகிறோம்! பட்டுப்போன மனித விறகு மரங்களைத் துளிர்க்க எழுந்தவனே! உனது காலடி நிழலே நாங்கள் கண்ணுறங்கும் சொர்க்கபுரியாம் தாயின்மடி! பழைமையேறிய பாறையிலே வேர்பிடித்தெழுந்து நிற்கும் திராவிட விதையே! உனது சூர்ய வெப்பத்தால்தான் என்றும் அரசியல் குளிர்ப்பிரதேசங்கள் சுகங்காணுகின்றன. கடல் அலைப்படுகைகளில் ஏறிவரும் நுரைப்பஞ்சுகள் போல், கரைகளில் மோதும் போது ‘கரைந்து விடுவதல்ல நமது வாழ்க்கை’யென்று, நம்பிக்கைப் போதனை செய்த புதிய ஆத்திசூடி நீ!

விதைகள் வெடித்துத் தோல் கிழித்துக் கிளம்பும் தாவர முளைகள் போல், உலகைக்காண விழையும் வேட்கை கொண்டவர்களாக எங்களை அவ்வப்போது அறிவுறுத்திய ஞானத்திருக்குறள் நீ! நாங்கள் தவம் செய்வதெல்லாம் இயற்கைத்தாய் மடியில் விழுந்து உடைந்துருளும் மழைத்துளி உயிரைப் போல, மானுடத்தலைவனாக நீ வாழ்ந்தாய்!

காடு, மேடு, பள்ளம் தாண்டிக் கடலில் கலக்கும் நதியின் வெற்றியைப் போல், உனது பயணம் எங்களுக்குத் தாரக மந்திரம் சொல்கிறது! நீ சூரியத்தீயில் தேனை மொண்டு தந்தவன்! சீறிவரும் புயலைப் பிழிந்து குளிர் சாதனம் உருவாக்கியவன்! கருத்துத்தாகம் எடுப்பவர்க்கெல்லாம் சிரபூஞ்சியாய்ப் வரையாது வழங்கும் வள்ளலாகப் பொழிந்தவன் நீ! நீ இடிமுழக்கத்திலும் இன்னிசைக் கச்சேரி நடத்தியவன்! அரசியல் பூகம்பங்களைச் சமப்படுத்தி அதிசய நறுமணப் பூங்காங்களாக உருவாக்கியவன். எரிமலைகள் கோபத்தைத் தணிக்கும் முகில் பூவாளியாக மாறிப், புனித மழை பொழிந்தவன். இருளடர்ந்த காட்டில் இருகைகள் கட்டிக்கிடந்த எங்களைத் தாழ்ப்பாள் திறந்து தமிழ்ப்பால் ஊட்டிய மூதாட்டி நீ! வீணைகள் பலவிருந்தும் மீட்ட ஆளில்லா நாளில், அண்ணாவால் அடையாளங்காட்டப்பட்டு அரசியல் நரம்பினில் நாதமிசைத்தவன் நீ! நீயோ இமைமூடாத உழைக்கும் சூரியன்! உன் விழியில் விழுந்து பாடப்புத்தகமாக இருப்பவன் தளபதி! பூமித்தட்டில் சிந்திய எச்சில் ஈரத்துளியில் வேர்பிடித்து எழுந்த நாங்களோ, திராவிட இளஞ்செடிகள்! பூ விரல்கள் தழுவும் புல்லாங்குழல்களாய் உனது எழுதுகோல் தவம் பெற்றது.

உனது எழுதுகோல் நெம்புகோலான பயிற்சியால்தான், மூட நம்பிக்கை பூத்துக் கிடந்த ஆன்மிக இமயமலையும் பெயர்ந்து இடுகல்லாய் விழுந்தது. சாதிமதம் பூத்த சரளைக்கற்கள் தங்களுக்குத் தாங்களே சமாதிகளை எழுப்பிக் கொண்டன. உனது எழுத்துச் சூட்டில் எழுந்தோம் நாங்கள் நட்சத்திர பூக்களாய்! உனது விரல் வழித்த வியர்வைத்துளியில் விழுந்தோம் சூரிய விதைகளாய்! நீ சுவாசமாய் அரசியலில் பண்பாட்டுச் செடிகளை வளர்த்தவன்! நீ உனது தீக்குச்சி விரல்களில் அடிமைத்தனத்தைச் சுட்டெரித்து விடுதலைத் தீபம் ஏற்றியவன்! உன்னைத் தொடர்ந்த தொண்டர்களுக்குப் பாலைவனங்களைத் தோண்டித் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் அமைத்தவன்! நெருப்பைத் தின்று செரிமானம் கொள்ளும் பூமியின் தந்திரத்தைப் போல, நீ அரசியல் நெருக்கடிகளை அற்புதமாகவே சமாளித்தாய்! வழிப்போக்கர்களின் கல்லடிப்பட்டு காயமேற்கும் கனிக்குலைகள் தாங்கிய மரத்தைப் போல, நீ எதிரிகளின் விமர்சனங் களிலும் நிமிர்ந்து நின்றாய்!

தேன் சுரக்கும் மலர்கள் காற்றின் உரசலையும், கவர்ந்திழுக்கும் வண்டுகளின் தீண்டுதலையும், இன்பமாக ஏற்றுக் காயம்படாமல் நிமிர்ந்து நிற்பது போல், நீ என்றும் எங்களுக்குச் சுகந்தருவதில் பெருமைப்படுத்தினாய்! மலையின் முகட்டிலிருந்து தாவிக் குதிக்கும் அருவியின் விழுதுகளைப் போல, அவ்வப்போது உன் தோற்றத்தில் தளபதியால் ஆட்சியிலும் கட்சியிலும் நாங்கள் புதுப்புதுப் பொலிவைக் காண்கிறோம்! ஒவ்வொரு தூணையும் தட்டும் போது, வெவ்வேறு ஓசை பிறப்பது போல, அரசியலில் சமூக சீர்திருத்தம் செய்வதில் நீ அதிசய ஆயிரங்கால் மண்டபமாகவே காட்சியளிக்கிறாய்!

ஆம், நீயே விதை! நீயே வேர்! நீயே விருட்சம்! நாங்களோ விழுதுகள்! ஆம்! தமிழக வானில் நீ ஒரு சுயம்பு! உனக்குள் சுழலும் சுறுசுறுப்பை மண்ணுலகம் உள் வாங்கிக் கொண்டது. நீ ஆட்சியிலும் விரிந்த வானமாகவே விளங்கினாய்! விழிகளைத் தொலைத்து விட்டு விளக்குகள் வாங்குகிற அரசியல் வாதிகள் மத்தியில், நீ மட்டும் சூரியப் பார்வையாய் மங்காது ஒளி விட்டுக் கொண்டிருந்தாய்! உன்னால் விளம்பரம் பெற்றவர்கள் உன்னைப் புழுதி வாரித் தூற்றுவதாக நினைத்து, மேடைகளில் அவர்களே ஆடைகளைக் கிழித்துக்கொண்டு அம்மணமாகிறார்கள்!

வானம் வசப்படும் என்று வல்லூறுகள் வசைபாடி வட்டமிடுவதால் என்ன பயன்? ஆனால் நீயோ அதனைப்பற்றிக் கவலைப்படாமல் பயணம் செய்தாய்! கானல் நீரை நம்பிக் கட்டுமரம் செலுத்த கூட்டணி சேர்ந்தார்கள் எதிரிகள்! வானவில்லைப் பிழிந்து வண்ணம் சேகரிக்க எண்ணி ஆட்சிக்கனவு கண்டவர்கள், தளபதியின் போர்வாளால் களத்தில் காணாமல் போனார்கள்!

பாவம்! அவர்களுக்குத் தெரியாது, சூரியனாகிய உன்னால் தான் நிறப்பிரிகை தோன்றும், மறையும் என்று! அவர்கள் கையிலிருந்த கடைசிப்பொருளையும் தவற விட்டுவிட்டு, அடுத்தவர் வீட்டு முன், பிச்சைப் பாத்திரம் ஏந்தி நிற்கிறார்கள்! சிலர் ஆட்சிக்கட்டிலைத் தன்னல வேட்டைக்காகப் பயன்படுத்தினார்கள்! அவர்களோ இன்று கடப்பாரையை விழுங்கி விட்டுக் கரைவதற்காகச் சுக்குக்கசாயம் சாப்பிட்டுத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள்!

நீ பதவி நாற்காலிகளால் புகழ்பெற்றவன் அல்லன்! நாற்காலிகள் தாம் உன்னால் புகழ் பெற்றன! இதோ உன் உருவமாய் உலா வருகிறார் தளபதி! நீ மணிமகுடத்தைச் சுகமாக நினைக்காமல் முள்கிரிடமாக கருதியதால்தான் மக்களின் தேவைகள் தெலைநோக்குப் பூக்களாகப் பூத்துக்கு லுங்கிச் சாதனை மணம் பரப்புகின்றன! நிறைகுடம் தளும்பாது என்றறிந்தும் கூத்தாடு கின்றன! குறிஞ்சிப்பூவை நெருஞ்சிமுட்கள் கூடிக் காயப்படுத்தலாம்! ஆனால் குறிஞ்சி குறிஞ்சிதானே! எரு உருண்டையை உருட்டி விளையாடும் துர்நாற்ற வண்டுகளுக்கு இலந்தைப் பழத்தின் மகத்துவம் புரியாதே!

நீயோ கட்டிச்சந்தனம் போல் காய்ந்து இறுகினாலும், நீர்கலந்து இளகினாலும் தமிழகத்தில் மணம் பரப்பும் பெரும் தலைவனாக அல்லவா ஒளிருகிறாய்! உறங்கி விழிப்பதற்காக இமைகள் அடிக்கடி ஒத்திகை பார்ப்பது போல, நீ எங்களைக் கடிதங்கள் வாயிலாக ஓய்விலிருந்து அவ்வப்போது உசுப்புவதில் உரமூட்டுவதிலும் உணர்வூட்டுகிறாய்! நீயோ நூலிழை நெய்யும் நூதனப் பட்டுப்பூச்சியைப் போல் அரசியலில் அறநெறியைப் பரப்ப அரும்பாடு பட்டாய்! தட்டானின் சுத்தியாலும், அறுக்கும் அரத்தாலும் ‘பொன்னாரம்’ அழகுபடுவதுபோல், நாங்களோ உனது எழுத்தாலும், பேச்சாலும் அழகு படுத்தப்படுகிறோம். நரை நெய்த முடியும், தரை தட்டும் தடியும் கொண்டலையும் நேரம் வந்து கதவைத்தட்டி முதுமை எங்களை முற்றுகையிட்டாலும், உன் அடிச்சுவட்டிலிருந்து நாங்கள் திசை மாறமாட்டோம்!

எரியும் மெழுகின் இறுதிச் சிரிப்பைப் போல் திடீரென அண்ணா மறைந்த பின், நீயோ சூரியத் திரியாய் அல்லவா எமக்கு, எரிந்து வெளிச்சம் தந்து கொண்டிருந்தாய்! இன்றோ, நீ தூண்டிய திரியாகத் தளபதி வெளிச்சம் தருகிறார். திராவிட மாடல் ஆட்சியைத் தந்து! காய்ந்துதிர்ந்த சருகுகள் அதன் வேருக்கே உரமாவதைப் போல, பெரியாரும், அண்ணாவும், நீயும் கொள்கை உரவேர்களால் தாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். நாங்களோ விழுதுகள் ஆனோம்! நீ அருந்தமிழில் அரசியலில் ஆட்சியியலில் அனுபவத்தில் முதிர்ச்சியாக இருந்ததால் ஆழ்கடல்போல் அமைதியாகவே இருந்தாய்! எங்களின் உயிர்கலந்த முதலும் நீ! முகவரியும் நீ! முத்தமிழும் நீ! முதல்வன் நீ!

அரசியல் கோட்டான்களால் அறிவாலய ஆலமரத்தை வீழ்த்த முடியுமா? இதோ தளபதி தூண்களாகித் தாங்கி நிற்கிறார்! நீ உயர்ந்த உச்சத்திலும், வீழ்ந்த மிச்சத்திலும், வாழும் சொச்சத்திலும் அரசியல் எச்சமாக இருந்தவன் அல்லவா? ஆம், நீயோ நிறைகுடம் என்பதால் தளும்பாமலிருந்தாய்! ஆனால் குறைகுடங்களோ தங்களது அரசியல் கோமாளித்தனத்தால் கூத்தாடுகின்றன! எரியும் மெழுகின் இறுதிச் சிரிப்பைப் போல் திடீரென அண்ணா மறைந்த பின், நீயோ சூரியத்திரியாய் அல்லவா எமக்கு எரிந்து கொண்டிருந்தாய்! காய்ந்துதிர்ந்த சருகுகள் அதன் வேருக்கே உரமாவதைப்போல பெரியாரும், அண்ணாவும் உன்னைக் கொள்கை உரவேர்களால் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள்!

“என் தலையிலுள்ள மணிமகுடத்தைத் தரையில் எதிரிகள் உருட்டிவிடலாம். ஆனால், என் கையில் உள்ள கொள்கை வாள் என்னும் எழுதுகோலை யாராலும் பறித்துவிட முடியாது” என்று கூறிய இலட்சிய வீரன் அல்லவா நீ! அந்த கொள்கை வாள்! இன்று தளபதி கையில்! வெற்றி நடைபோட்டுவரும் அரிமா, தான் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்ப்பது என்பது, தான் மேலும் முன்னேறுவதற்கான பயணத்தைத் தொடர்வதற்குத்தான்!

கரிகாலன் கல்லணை காலங்கடந்தும் பேசப்படுவது போல, கலைஞர் கோட்டமும் பேசப்படும். ஆம்! திருவாரூர் மண்ணில் திருவருட்செல்வர் கலைஞர் கோட்டம் இன்று திறக்கப்படுகிறது.

சுயமரியாதைச் சுடரொளியாக, பகுத்தறிவுப் பகலவனின் சீடனாக, அண்ணாவின் தம்பியாக, தளபதி தலைமையில் உனது இலட்சியப் பயணம் தொடர்கிறது! தொண்டர்களின் வாழ்த்துக்களுடன். வாழ்க! வாழ்க! நீ பல்லாண்டு!

வாழ்க கலைஞர்! வளர்க அவர் புகழ்!